7 JUN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 25 புதன்கிழமை (07 - 06 2000) VALAMPURI ஒலி: 170

# அவசரகாலச்சட்டத்தைக்கண்டித்து
# கொழும்பில்பெரும் ஆர்ப்பாட்டம்!

## எதிர்க்கட்சிகள் நடத்தின

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வரும் அவசர காலசட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சமையல் எரிவாயு மற்றும் பாவனைப் பொருட்களின் விலை ஏற்றங்களை எதிர்த்தும், எதிர்க்கட்சிகள் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று கொழும்பில் நடத்தியுள்ளன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டன

கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக மாலை 4மணி முதல் 5மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ்வார்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் காமினி அத்து கோறள சுதந்திர ஊடக அமைப்பின் தலைவர் அனந்த தேசப்பிரிய ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பிக்களான கருணாசேன கொடித்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

★ யாழ்.குடாநாட்டில்

## புலிகளிடம் இழந்தபகுதிகளை மீட்பதுஎப்போதென கூறுவதுகடினம்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க தெளிவான திட்டமொன்றைக் கொண்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பி.பி.சி இக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்

அப் பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது: தற்போது நடைபெற்றுவரும் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர நட்பு நாடுகளின் உதவிகளைப்பெற அரசாங்கம் எப்பொழுதும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தடை முகாம்கள் அகற்றப்பட்டு சுற்றிவளைப்பு; தேடுதல் தீவிரம்!

(கொழும்பு)

கொழும்பு நகரில் போடப்பட்டிருந்த இராணுவக்காவல் அரண்கள் தடை முகாம்கள் மற்றும் மண்மூட்டைகள் தகரப்பீப்பாக்கள் அகற்றப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் போக்குவரத்து வாகனப் போக்குவரத்து ஆகியவற்றில் இருந்துவந்த

[6 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த உயர்தரம்; ஆண்டு 5புலமைப்பரிசில்

## ஏ.கே.யுடன் இராணுவம் தப்பி ஓடியது

(கொழும்பு)

கொழும்பு கொம்பனி வீதியில் உள்ள இராணுவ முகாமில் இருந்து இராணுவ வீரர் ஒருவர் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தப்பி ஓடும் போது தன்னுடன் ஏ.கே.ரக துப்பாக்கி ஒன்றையும் 120 ரவைகளையும் எடுத்துச் சென்றதாகவும், இச் சம்பவம்நேற்று முன்தினம் இரவுநடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## பரீட்சை யூலை31லும் யூலை 6லும் நடைபெறுமென ஆணையாளர் அறிவிப்பு

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைகள் யூலை மாதம் 31ம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான

( 6ஆம் பக்கம் பார்க்க)

★ செக்கோசிலவாக்கியா அரசியல் முறையில்

## தீர்வுகாணவேண்டுமென்றுகலைஞர் கூறியது அவரது சொந்தக் கருத்தே!

### பி.ஜே.பி துணைத்தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி

[சென்னை]

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு செக்கோசிலவாக்கியா அரசியல் முறையில் தீர்வு காணலாம் என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி கூறியிருப்பது அவரது சொந்தக் கருத்து என பாரதிய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வரின் தனிப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

★ வெற்றிலைக்கேணியில்

## மூழ்கடிக்கப்பட்ட 2 டோறாக்களின் பெறுமதி ஒருகோடியே 40 லட்சம்!

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி கிழக்கு கடல் பிராந்தியத்தில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூழ்கடிக்கப்பட்டும், சேதத்திற்குள்ளானதுமான டோறாப் படகுகளின் பெறுமதி ஒரு கோடியே நாற்பது லட்சம் என கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6-ம் பக்கம் பார்க்க)

## பொதுத்தேர்தல்; நாட்டின்நிலைமை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆராயும்

நாட்டின் தற்போதைய நிலை குறித்தும் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் சம்மந்தமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழு விரைவில்கூடி ஆராயவுள்ளது.

திருமலை மாவட்ட எம்.பியும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான இரா சம்பந்தன் தலைமையில் மத்தியகுழுகூடி ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## தென்மராட்சி பகுதிப.நோ.கூ .சங்கங்கள் பலகோடி ரூபாவை இழந்துள்ளன

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து அப் பகுதியில் உள்ள பல நோ.கூ. சங்கங்கள் பாரியஇழப்பைச் சந்தித்துள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(6 ஆம்பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்ட நீடிப்பு ஐ.தே.கட்சி எதிர்த்து வாக்களிக்கும்!

(கொழும்பு)

அவசர காலச் சட்ட நீடிப்புச் சம்பந்தமான வாக்களிப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களிப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அவசர காலச் சட்ட நீடிப்புச் சம்பந்தமான விவாதம் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. (வ)

## ஓமந்தையில் மோதல்

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இரு தரப்பினர்களுக்குமிடையே பரஸ்பரம் துப்பாக்கிச் சண்டைகளும், மோட்டார்த் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளதாகவும் இம் மோதல்களின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை எனவும் அச்செய்திமேலும் தெரிவித்துள்ளது. [வ-4]

## இலங்கையில் அமைதி நிலை ஏற்பட இந்தியப் பிரதமர் உதவவேண்டும்

### யாழ். ஆயர் உருக்கமான வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடரும் யுத்த நிலையை நீக்கி அமைதியை ஏற்படுத்த இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேடைக்கு அழைக்கும் முயற்சியில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஈடுபட வேண்டுமென யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் உருக்கமான வேண்டுகோள் விடுத்

( 6ஆம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறி விட்டது

மாணிக்கம் செல்வராசா ஆகியஎனது தங்கசைச்சங்கிலி ஒன்று 04-06-2000 அன்று நந்தாவிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிவாஸ் கிறீம் கவுசில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நன்றி

(763)

### JAPAN தயாரிப்பு

National Air Conditioner, Saudi இல் இருந்து கொண்டு வரப்பட்டது. நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. 70, Karaikkaddu Lane, Vannarpannai, Jaffna.

(725)

### தவறிவிட்டது

சிவசலா சோமசுந்தரம் ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (816702968V) விசேடஅ.அ.(0902009169) ஆகியன தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வலம்புரி பணிமனையில் ஒப்படைக்கவும்.

[778]

### இறைச்சிக் கோழி

கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு -31, மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (671)

### வைத்தியம்

செங்கண்மாரி. அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால்அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்தியகலாநிதி,
சி. இராசரத்தினம்,
121,
2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P. 2459

[751]

## அறிவித்தல்

வாடிக்கையாளர் நலன் கருதி
நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில்
இயங்கிவரும்
**மனோ ஸ்ருடியோ**
தனது சேவையை
சுழிபுரம்' ஜெயந்தி மில்
அருகாமையிலும் ஆரம்பித்துள்ளது. என்பதை அறியத் தருகின்றோம்.

**மனோ ஸ்ருடியோ**

211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
சுழிபுரம் வடக்கு சுழிபுரம்.

[C-445]

## வட இலங்கைச் சங்கீத சபை
## அறிமுறைப் பரீட்சை - 2000

இரண்டாயிரமாம் ஆண்டு யூன் மாதம் 10,11ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அனைத்து அறிமுறைப் பரீட்சைகளும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

திருமதி செ. மகாலிங்கம்
யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளரும்,

வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

அ. தற்பரானந்தன்
செயலாளர்.

(கி 442)

சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கான
## பொதுக் கூட்டம்

விடயம்: அவசர கலந்துரையாடல்
இடம்: கைலாசபதி கலையரங்கு யாழ். பல்கலைக்கழகம்
திகதி: 08-06-2000 வியாழக்கிழமை
நேரம்: காலை 11-00 — 12-30

அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

தலைவர்.

சித்தமருத்துவ மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(771)

## இடம் மாற்றம்

யாழ் - நகரில் இயங்கி வந்த
**மகா சில்க்ஸ்**

தற்பொழுது தற்காலிகமாக காங்கேசன்துறை வீதி கோண்டாவில் மேற்கு சிறி விநாயகர் வைத்தியசாலைக்கு அருகிலும்,
கிளை: உடுவில் டச்சு வீதியில் ப.நோ.கூ. சங்கம் முன்பாகவும் இயங்கி வருகின்றன. மலிவு விலையில விற்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(770) மகா சில்க்ஸ்

## யாழ். இந்துவில் இன்றுமுதல் இயங்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை பூம்புகார் அ.த.க. பாடசாலை ஆகியன இன்று புதன் கிழமை பிற்பகல் 1.00 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இயங்கவுள்ளன

சகல ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊழியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர்கள் கோரியுள்ளனர். [சி]

## விக்னா

கல்வி நிறுவனம்
A/L 2000 DAY CLASS
O/L DAY CLASS
ஆண்டு 6 - O/L
EVENING CLASS
ஆரம்பமாகி விட்டன
**A/L**
கலை, வர்த்தகம்
2000, 2001, 2002
வழமையான
நேரப்படி
ஆரம்பம்: 10-06-2000
(765) சனி

## அவசர கலந்துரையாடல்

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த 2ம் வருட சகல மாணவர்களையும் 8-6-2000 நாளை (வியாழன்) காலை 11-00 மணிக்கு விரிவுரைகளை ஆரம்பிப்பது பற்றி கலந்துரையாடுவதற்காக முகாமைத்துவ மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

2ம் வருட பிரதிநிதி
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

(கி 447)

## எடிசன் அக்கடமி

யாழ்ப்பாணம் நல்லூர்

இரு இடத்திலும் தரம் 6 முதல் O/L வரை வகுப்புகள் இன்று புதன் கிழமை முதல் 7-6-2000 ஆரம்பமாக உள்ளது.

நிர்வாகி.

(745)

## தேடுகின்றோம்

சாவகச்சேரியைச் சேர்ந்த தர்மலிங்கம் நவரத்தினராசா குடும்பம் சகோதரர் திருநாவுக்கரசு குடும்பம், புகனேந்திரம் குடும்பம், இவர்கள் இருப்பிடத்தை அறியத்தரவும்.

பொன்னையா தவராசா
குடும்பைகட்டி,
புலோலி வடக்கு.

(C 443)

## கலந்துரையாடல்

இராமநாதன் நுண்கலைத்துறை 4ம் வருடமாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 08.06.2000 (வியாழன்) காலை10.00மணிக்குநுண்கலைக் கழகத்தில் நடைபெறும் இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் உட்பட அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

4ம் வருட மாணவப்பிரதிநிதி
நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(772)

## திறப்பு விழா

சுன்னாகம் மத்திய சந்தையும்
சுன்னாகம் மத்திய பேருந்து நிலையமும்

அன்புடையீர்,

U.N.D.P. நிறுவனத்தினரால் புனரமைக்கப்பெற்ற சுன்னாகம் மத்திய சந்தையும், எமது சபையினால் புனரமைக்கப்பெற்ற சுன்னாகம் மத்திய பேருந்து நிலையமும் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு
எமது சபையின் தலைவர்
மாண்புமிகு திரு. தி.மா. செல்வராசா JPUM
அவர்களால் திறந்து வைக்கப்படும்.
பிரதம விருந்தினர்:
திரு.பி.வி. கிருஷ்ணசாமி அவர்கள்
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

அத்தருணம் தங்களையும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
பொ.வை.பாலசுப்பிரமணியம்
செயலாளர்,
உத்தியோகத்தர்,ஊழியர்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(கி 444)

## அவசர கலந்துரையாடல்

பொதுக்கலை இறுதிவருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 08-06-2000 நாளை (வியாழன்) காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும், பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுக்கலை மாணவர்கள்.

(777)

## அவசர கலந்துரையாடல்

இராமநாதன் நுண்கலைத்துறையின் அனைத்து வருட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் 08-06-2000 நாளை (வியாழன்) காலை 10.00 மணிக்கு நுண்கலைத்துறை பொது மண்டபத்தில் இடம் பெறும், அனைவரும் தவறாது சமுகம் தரவும்

தலைவர்.
கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(776)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

### விரிவுரை ஆரம்பம்

''மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் திங்கள் 12-06-2000, காலை 10.00 மணிக்கு தொடங்கவுள்ளது எனவே மேற்படி பயிற்சி நெறி மாணவர்கள் அனைவரையும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்'

(கி 448)

## தேடுகின்றோம்

சாவகச்சேரி கச்சாய் வீதியை சேர்ந்தவரும்சாந்தி மணிக்கூட்டு கடையில் வேலை செய்தவருமாகிய கார்த்திகேசு திருக்குமாரை அவரதுபெற்றோர் தேடுகின்றனர்.

அரசடிவீதி
கட்டுடை,
மானிப்பாய்.

(757)

## தொடர்பு கொள்ளவும்

### அசெம்பிளி ஒப் கோட் சபை

சாவகச்சேரி, கைதடி.

விசுவாசிகள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள இடங்களைக் குறித்து கடிதம் மூலமோ அல்லது நேரடியாகவோ தெரியப்படுத்தவும்.

வண ஜேசன் செல்வராஜா
அசெம்பிளி ஒப் கோட்
பருத்தித்துறை,
(பேரூந்து டிப்போ எதிரே)

(756)

## தேடுகிறோம்

தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரியைச் (மகளிர் கல்லூரி அருகாமை) சேர்ந்த திருமதி காமினி வன்னியசிங்கம் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் பின்வரும் விலாசத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

வீ. சோமசுந்தரம் (ஆசிரியர்)
இராசவீதி சந்தி.
கோப்பாய் தெற்கு.

(750)

## தகவல் தரவும்

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த செல்லத்துரை, நடராசா, சண்முகம், நகுலா குடும்பத்தினர் பற்றியும், துரை அருணோதயராசா (A.R.S. அச்சகம்) குடும்பம் பற்றியும் அறிந்தோர் தகவல் தரவும்.

த. வேலாயுதம்
சட்டத்தரணி.
மே/பா.த. சண்முகசுந்தரமூர்த்தி
அதிபர்
கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(760)

## தேடுகின்றேன்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சோமசுந்தரம் அவன்யூ யோ. சந்திரன் இ. பரமநாதன் ஆகிய இருவரையும் கைதடி முதியோர் இல்லத்தை சேர்ந்த க. அமிர்தலிங்கம் ஆகிய நான் தேடுகின்றேன். தொடர்பு கொள்ளவும்

பத்திராபதி பிளேற்றிங் (ஐ. சிலரட்ணம்)
483/1, K. K. S. றோட்
யாழ்ப்பாணம் [சிவன்கோயில்]
சந்திக்கும்நேரம் 9 00-2.00

(761)

## பாடசாலைச் சேவை

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டைக்கு பாடசாலை மாணவர்களுக்கான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செல்லவிரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்.

முகவரி:
தேவி மில்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

நேரடித் தொடர்புகளுக்கு:
தினேஸ் பாடசாலை சேவை,
YMCA முன்பாக,
திருநெல்வேலி.

ஆரம்பம். 07 06-2000
புறப்படும் நேரம்- 1. 30 [பு. நே]
இடம்:- திருநெல்வேலி சந்தி.

[764]

## அறிவித்தல்

### ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

39, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சங்கம் தற்காலிகமாக 47/3, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கில் (மருத்துவ பீடத்திற்கு அண்மையிலுள்ள டாக்டர் ந. சிவராசாவின் இல்லத்தில்) இயங்குகிறது.

எமது சங்கத்தில் மாதாந்த உதவி பெறுவோரும், இடம் பெயர்ந்து வாழும் எமது சங்கத்தில தையற் பயிற்சி பெற்றோரும் கிழமை நாட்களில் மு. ப. 10.00 - 12.00 வரை தொடர்பு கொள்ளவும்.

தலைவர்

(766)

## மாணவர்கள் பாதிப்பாம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை, சுண்டுக்குளிப் பகுதிகளில் சில பாதைகளில் போக்குவரத்து செய்ய முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதிகளில் உள்ள பெற்றோர் இடம் பெயர்ந்த போது வீட்டுச் சென்ற தமது பிள்ளைகளின் பாடநூல்கள், பாடசாலைச் சீருடைகள் போன்றவற்றை எடுத்துவர இயலாதுள்ளதாகவும் கூறப்பட்டது.

(சி)

## மானிப்பாயில் தொடரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றுவந்தபட்டப் பின்படிப்புடிப்ளோமாவகுப்புகள் எதிர் வரும் சனிக்கிழமை முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## கோரிக்கை

அரியாலை உபதபாலகத்தில் இதுவரை சித்திரை மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு, ஓய்வூதியக் கொடுப்பனவு புற்றுநோய்க் கொடுப்பனவு என்பவற்றை பெற்றுக் கொள்ளாத பொது மக்களை யாழ்ப்பாணம் பிரதம தபால் கந்தோரில் வந்து எதிர்வரும் 8 ஆம் திகதியில் இருந்து ஒரு கிழமைக்குள் பெற்றுக் கொள்ளுமாறு. யாழ். பிரதம தபாலதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(சி)

## ஓய்வூதியர் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மக்கள் வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர் தமது 2000 - வைகாசிமாதத்திற்குரிய ஓய்வூதியத்தை தத்தம் இருப்பிடத்திற்கு அண்மையில் உள்ள மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனஎன்றுபிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(சி)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதி வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றது.

1) கேள்விப்பத்திரங்கள் 14-06-2000 திகதி நண்பகல் 12.00 மணி வரை இவ்வலுவலகத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.
2) கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
3) கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலிட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 21-06 2000 ஆம் திகதி பிற்பகல் 11 00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4) கேள்விகள் 21-06-2000ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
5) கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
6) மீளளிக்கக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% வைப்பிலிட வேண்டும்.
7) மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|
| 1. ஶ்ரீஅம்பாள் ச. ச. நிலைய புனரமைப்பு | 500.00 | 200.00 |
| 2. கட்டுடை ச. ச. நிலைய தளபாடம் வழங்கல் | 300.00 | 200.00 |
| 3. நவாலி வடக்கு ச. ச. நிலைய மலசலகூடம் அமைத்தல் | 300.00 | 200.00 |
| 4. மேதர் ச. ச. நிலைய புனரமைப்பு சில்லாலை | 500.00 | 200.00 |
| 5. சங்கானை மேற்கு ச.ச. நிலைய முன்பள்ளி பாடசாலை மேலதிக கட்டிடம் அமைத்தல் | 300.00 | 200.00 |
| 6. உதயதாரகை ச.ச. நிலைய தளபாடம் வழங்கல் | 360.00 | 200.00 |

(வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்)
ஜே, பி. யூ. எம்.
தலைவர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(கி-441)

விராட் விஸ்வப் பிரம்மணே நமக

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் வைகாசி மாதம் 28ம் திகதி [8-6-2000] வியாழக்கிழமை நாளை காலை 8.30 மணிமுதல் 10.00 மணிவரையில் வரும் சுப முகூர்த்த வேளையில்

திரு. M. நாகராசா தம்பதிகளின்
புதல்வன் திருநிறை செல்வன்
**நந்தபாலன்**
(கண்ணன் நகை மாடம்)
கண்டி வீதி, சாவகச்சேரி
அவர்களுக்கும்

திரு. P. பரமநாதன் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி
**மதிவதனா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமணம் நடாத்த பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று கே. கே. எஸ் வீதியில் உள்ள வண்ணை நாச்சிமார் கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்தில தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாட்டு நிலைமை காரணமாக இதனை தனிப்பட்ட அழைப்பாக பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்ளவும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி. மு. நாகராசா
குடும்பத்தினர்
தட்டாதெரு. சங்கத்தானை,
சாவகச்சேரி.

தற்போதைய முகவரி:
காரைக்காட்டு வீதி,
இல. 74, வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு- திருமதி. பொ. பரமநாதன்
குடும்பத்தினர்
40, ஜமுனா வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி:
579, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவில் அருகாமை

(இரு வீட்டார் அழைப்பு)

(762)

## மீண்டும் யாழ். நகரில்

### T.குமாரசாமி அன் சன்ஸ்

வாடிக்கையாளர் நலன் கருதி 248/1 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள எமது விற்பனை நிலையத்தில் சகல விதமான கண்ணாடிகள் மற்றும் பான்சி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

248/1 கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

(கி-436)

## இடம் மாற்றம்

91/1, மின்சார நிலைய வீதியில் இயங்கி வந்த
மேர்வின்ஸ் ஸ்தாபனத்தார்
தற்பொழுது தற்காலிகமாக
மானிப்பாய் அந்தோணியார் கோவில்
முன்பாக இயங்குகின்றது. என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகின்றோம்.

மேர்வின்ஸ்.

[728]

## தேடப்படுகின்றார்கள்

சாவகச்சேரி புனித விகோரியார் கோவிலடியைச் சேர்ந்த சாந்தகுமார், புஷ்பா ஆகியோரையும் உறவினர்களையும் தேடுகின்றோம்.

அல்போன்ஸ்.
ஆசிரியர்
பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[739]

## தேடுகின்றோம்

ஐயர் லேன், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த

திரு சண்முகசுந்தரம் திருமதி புஸ்பம் சண்முகசுந்தரம ஆகியோரைத் தேடுகின்றோம்.

ச. சிவலோகநாதன்
59(185/5) பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(720)

## தேடுகிறோம்

சாவகச்சேரி சிவன்கோயிலடியைச்சேர்ந்த
திரு. கந்தசாமி இரங்கநாதன் (ரங்கன் மாஸ்ரர் கெமிஸ்றி) திருமதி இராஜேஸ்வரி (குட்டான்)
இவர்களைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்வருபவர்கள் எவருடனாவது தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வை. விஜயபாஸ்கரன்
194/1 நாவலர்வீதி
யாழ்ப்பாணம்.

திருமதி. சரஸ்வதிபிறைசூடி
77 மானிப்பாய்வீதி
யாழ்ப்பாணம்.

(729)

## தேடுகிறோம்

சாவகச்சேரி டச்சு றோட்டைச் சேர்ந்த திரு. சின்னப்பு (வைத்தியர்) அவரது மனைவி இராஜகுமாரி மகள் ஆனந்தஜோதி, திரு. முத்துலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவரது மனைவி பத்மாவதி ஆகியோரை தேடுகிறோம் தகவல் அறிந்தவர்கள தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

உரிமையாளர்
விஜிவீடியோ விஷன்,
கலட்டி வீதி, கரவெட்டி-

(438)

## தேடுகிறோம்

யாழப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த நிஷாந்தன் லக்கி என்பவரை நடராசாவின் மனைவி புவனேஸ்வரி, (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலைக்கு முன்பாக வசிப்பவர்) தேடுகிறார்

முடமாவடி,
திருநெல்வேலி,

(732)

## தேடுகின்றோம்

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த

வி. பொன்னம்பலம், அம்பிகைபாலன் சொர்ணம் ஆகியோரை கீழ்வரும் முகவரிக்கு உடன் வரும்படி அல்லது தொடர்பு கொள்ளும்படி சகோதரர் பாலசுப்பிரமணியம் கேட்கின்றார்.

கே. சதாசிவம்
இராமர் வளவு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை,

[726]

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

[வவுனியா]

தொடரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் பின்வருமாறு

★ இளம்பருதி / சுடர்ஒளி (தவராஜா ரஜனி) யாழ்ப்பாணம்

★ மறைச்செல்வன் (செல்வராஜா ரவீன்காந்தன்) வவுனியா

★ சபா (மாணிக்கம் கனகாம்பிகை) மல்லாவி

★ சுவிதரன் (காசிநாதன் கமலேஸ்வரன்) யாழ்ப்பாணம்

★ எழில்வேந்தன் (கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வரன்) திருமலை

[ச-7]

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(புலோலி)

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்த மட்டுவிலைச் சேர்ந்த ஆர்.ஆறுமுகம் என்பவரும், ஷெல் வீச்சினால் காயமடைந்தசாவகச்சேரியைச் சேர்ந்த கே.மயில்வாகனம் என்பவரும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(வ-52)

## இருவர்கைது

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவலம்பதிவீதியைச் சேர்ந்த தியாகராஜா மதனபாதம் (வயது 20)அச்சுவேலி விக்கினேஸ்வரா வீதியைச் சேர்ந்த கதிரவேலு வேணுகோபன் (வயது 20) ஆகிய இரு இளைஞர்களும் கடந்த சனிக்கிழமை காலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(14-சி)

## திருடர்கள் துணிகரம்

(யாழ்ப்பாணம்)

பகல்வேளை திருட்டு முயற்சியில் தோல்விகண்டவர்கள் இரவுவேளை வீட்டார் இல்லாத போது லாண்ட் மாஸ்டர் ஒன்றில் வந்து பெறுமதி வாய்ந்த சகல பொருட்களையும் திருடிச் சென்றுள்ள சம்பவம் ஒன்றுஈச்சமோட்டை விதானயார் ஒழுங்கையில் நிகழ்ந்துள்ளது.

சம்பவதினம் பகல் குறிப்பிட்டவீட்டில் மின்விசிறி ஒன்றை திருடிச் செல்ல முயன்றஇருவர் வீட்டுக்காரரைக் கண்டதும் தமது சைக்கிளையும்விட்டு விட்டுத்தப்பிஓடிவிட்டதாகவும் பின்னர் ஊரடங்கு வேளை வீட்டார் பாது காப்புக்கருதி வேறிடம் சென்ற சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி இவ் விதம் நடந்துகொண்டுள்ளனர். என்றும் குறிப்பிட்ட வீட்டுக்காரர் ஓர் ஆசிரியர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## காயமுற்றவர் மரணம்

[யாழ்ப்பாணம்]

கடந்தமாதம்15ம்திகதி இரவுகுருநகரில் ஷெல்வீழ்ந்து வெடித்ததில் காயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 7பிள்ளைகளின் தந்தையான யோன்பிள்ளை அன்ரன் [வயது39] என்பவர் நேற்றுமுன்தினம் மாலை மரணமானார்.

இவரின் இறப்பை அடுத்து இச்ஷெல் தாக்குதலினால் இறந்தவர் எண்ணிக்கை 6ஆக உயர்ந்துள்ளது.

[க-12]

## அறிவித்தல்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்கள், மற்றும் பணியாளர்கள் அனைவரையும், 09-06 2000 வெள்ளிக்கிழமை மு. ப. 10.30மணிக்கு வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி தலைமை அலுவலகத்திற்கு தவறாது சமுகந்தருமாறு அழைக்கின்றேன்.

தலைவர்
சாவகச்சேரி ப, தெ. வ. அ. கூ, சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

மானிப்பாய்.

(752]

## உயர்தர மாணவர்களுக்கான சந்திப்பு

சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2000, 2001-ம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான சந்திப்பு வடமராட்சி கல்வி வலயத்தில் 09-06-2000 வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், வலிகாமம் கல்வி வலயத்திலும் 10-06-2000 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் (மருதனார் மடம்) இடம்பெறும் அனைத்துமாணவர்களும்தவறாது கலந்து கொள்ளவும்.

அதிபர்.

[755]

## மதுபாரத் வித்தியாநிலையம்

தரம் 6 முதல் 13 வரை அனைத்து வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டது இதுவரை சமுகம் தராத ஆசிரியரும் மாணவரும் சமுகம் தரவும்.

நிர்வாகி,

93/21,, இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(753)

## தகவல் தரவும்

விசியன் கடை உரிமையாளர் (நுணாவில்) செல்லப்பா சிவானந்தம்(விசியன்)குடும்பத்தினர் இருக்கும் இடத்தை அறியத்தரவும்.

இ.ஸ்ரீதரன்
அப்பிளானை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(723)

## ஸ்ரீவல்லிபுரா போட்டோ

★ எதிர்வரும் 10-06-2000 படச்சுருள்கள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படும்.

★ கமரா, பிளாஸ். என்லாச்சர் மற்றும் புகைப் படத்துறைப் பொருட்கள் விற்பனைக்குண்டு

★ இதுவரை PHOTO CHROME (PVT) LTD.என்று இயங்கிவந்த எமது ஆய்வுகூடம் 01-03-2000 இல் இருந்து COLOR PLUS (PVT) LTD. என வியாபார முகாமைத்துவத்தை மாற்றி உள்ளது. அதனால் அனைத்து புகைப்படங்களுக்கும் ஒரு ரூபா விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

### " குருவிச்சானெல்லை "

புலோலி தெற்கு,
புலோலி.

(727)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூகநிலையத் தலைவரும்,இலங்கைசெஞ்சிலுவைச்சங்கயாழ் கிளை பொருளாளரும்,சமூக சேவையாளருமாகிய

### திரு. திருநாவுக்கரசு உதயசூரியன்

அவர்கள்
(விலைமதிப்பீட்டுத்திணைக்களம்,யாழ்ப்பாணம்)

சமாதான நீதிவானாக நீதி,அரசியலமைப்பு விவகார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளமையையிட்டு பெருமகிழ்வடைவதோடு,அவரது சமூகப்பணிகள்சிறப்புற இறைவனை வேண்டி அவரையும் அவரது குடும்பத்தினரையும் பாராட்டிவாழ்த்துகின்றோம்.

விக்கினேஸ்வரா சனசமூகநிலைய
நிர்வாகத்தினர்.

(735)

7 JUN 2000

ஆற்றுவார் ஆற்றல் பசி
ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்
- குறள்

# வலம்புரி

## பாராட்டவேண்டும்

மக்கள்இடம் பெயர்ந்து முகாம்களிலும் சுற்றங்களோடும் ஒட்டிக் கொண்டிக்கின்றனர். அன்றாட உழைப்பாளிகள் அநேகா இவர்களில் அடங்குவர். மைல்கணக்கில் பாண் தேடி அலைகின்ற காட்சி நாம் காணாமல் இல்லை. இந்த அவலங்களைப் போக்க அரச அதிபர் சண்முகநாதன் ஏற்கும்பணி பாராட்ட வேண்டியதே வாராவாரம் அட்டைக்கு மா, சீனி விநியோகம் மண்ணெண்ணெய் விநியோகம் சீராகநடைபெற எடுக்கும் முயற்சி காலத்தின் தேவை தான். கழுகுகளின் பார்வை விநியோகத்தை ஊறு செய்யாதும் பார்த்துக் கொள்ளுதல் சிறப்பாக அமையும்.

அரச அதிபரின்நேரடிக் கண்காணிப்பில் இவை நடைபெறுவதால் சற்று ஆறுதல் மக்களுக்கு கிடைத்திருக்கிறது. வலி மேற்குப் பகுதியில் செறிந்திருக்கும் மக்கள் நிவாரணப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முன்னை இடங்களுக்கே அலைய வேண்டியிருக்கிறது. அதனையும் நிவர்த்தி செய்யும் மாற்று வழிகளைக் கையாண்டால் சேவை மேலும் மேன்மையுறும். ஒதுக்கப்பட்ட நிவாரணப் பொருள் உரியவருக்குக் கிடைக்காமற் போகும் சந்தர்ப்பங்கள் உண்டு விநியோகம் நடைபெறும் போதுவரவில்லை முடிந்து விட்டது என்ற முகாமையாளர்களின் பதில் எவ்வகையில் நியாயப்படுத்தலாம்என்று தெரியவில்லை 1200 குடும்பத்துக்குஉரியகிளை ஒன்றில் ஒரு பரல் தான் வந்தது விநியோகித்து முடிந்தது என்றபதில் அரச அதிபரின் புதிய நடவடிக்கை முன்வந்தது எங்களுக்குரிய எரிபொருளுக்கு எப்போ வரவேண்டும், என்றால் தெரியாதுஎன்ற மொட்டைப் பதில் தான் வரும்.

இடப் பெயர்வுக்கு முன் எந்த விளம்பர அறிவித்தலும் இன்றி விநியோக ஒதுக்கீடு வற்றிப்போகும். மக்களைசாத்திரம் கேட்டு பொருள்கள் பெற வர வேண்டும் என்று எண்ணினார்களோ? உண்மை நிலை மனேச்சர்களுக்குத் தான் வெளிச்சம்.

வேடிக்கை என்ன என்றால் பொதுமக்களுக்கு இல்லை இல்லை என்றபொருள்கள் கிளைகளின் களவின் போது தொலைந்து விட்டது என்ற கூற்றுத்தான். முற்பகல் செய்யின்பிற் பகல் விளையும் என்பதைஇவர்கள்புரிய மாட்டார்கள்.

- அன்புடன் ஆசிரியர்

# ஏழைகள் உணவுக்குத் திண்டாட்டம்

# கறுப்புச் சந்தையில் 'மா' தாராளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் போதியளவு மா கையிருப்பில்உள்ள போதிலும் மக்களுக்கு அதனை விநியோகிப்பதில் ஒழுங்கு சீரின்மையால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

கறுப்புச்சந்தையில் 35ரூபா முதல் 40 ரூபா வரை மா விற்கப்பட்டுவருவது குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாவை விநியோகிப்பதற்கு திட்டமிட்ட போதிலும், அது சீராக நடைபெறவில்லை என்பதும், சங்கங்களுடான விநியோகமும், பேக்கரி சங்கங்களுடன் ஏற்பட்ட முரண்பாடும் பாணுக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி ஏழை மக்களின் வயிற்றில் அடிப்பதாகவும்,

ஆனால் இது குறித்து அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை எனவும் மக்கள் குறைப்படுவதும் இங்குகுறிப்பிடத்தக்கது. [ந]

## ஓய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராமிய வங்கிகளின் ஊடாக ஒய்வூதியம் பெறுபவர்கள் தவிர்நத ஏனைய வங்கிகளின் ஊடாக ஒய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியர்களின் ஆனிமாதஒய்வூதிய வவுச்சர்களை மேற்படி பிரதேச செயலக அலுவலக நேரத்தில் காலை9மணி முதல் பிறபகல்1மணிவரை பெற்றுக் கொள்ளலாம் என வலி-கிழக்கு பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (சி)

## ஆணையாளரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த மூன்று மாதங்களாகக் கூட்டப்படவில்லை எனவும், இதனால் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் எனவே மாதாந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். மாநகர சபை ஆணையாளரை புளொட் அமைப்பின் மாநகரசபைப் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர். (ந)

## ஆலோசனை

(கொழும்பு)

உள்ளூர் செய்தி ஊடகங்கள் மீதான தணிக்கையைத் தளர்த்துவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமை விரைவில் உருவாகும் என அரசு நம்புவதாகத்தெரிவிக்கப்பட்டது. (சி)

## "கிரிக்கெட்" ஆடுகளமாகும் யாழ்ப்பாண நகர வீதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் மக்கள இடம்பெயர்வை அடுத்து யாழ்.நகரை அண்டியுள்ள வீதிகள் எல்லாம் கிரிக்கெட் ஆடுகளமாக மாறிவருவதாக அவ்வீதிகளில் செல்வோர் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகள் எவையும் இயங்காததையடுத்து மாணவர்கள் தமது பொழுதுபோக்கை வீதிகளில் மேற்கொள்வதாகவும் கிரிக்கெட், பட்மின்ரன் போன்ற விளையாட்டுகளை வீதிகளில் வைத்தே விளையாடி வருகின்றனர்.

பிறவுண் வீதி, நீராவியடிப் பிள்ளையார் வீதி போன்ற வீதிகளிலேயே இத்தகைய விளையாட்டுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. [கு]

## வலி-கிழக்குப்பிரதேசசபை அபிவிருத்தி; ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது

(ஆவரங்கால்)

வலி.கிழக்குப் பிரதேசசபையின்அபிவிருத்தித்திட்டங்களுக்கென புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை தனது நிதியிலிருந்து எண்பது இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அச்சுவேலிக்கு பவுஸர் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம் உட்பட பல்வேறுதிட்டங்களுக்கு இந்நிதி பயன்படுத்தப்படும்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ்தேவானந்தா மற்றும் ஜெகன் எம்.பி ஆகியோரின் முயற்சியினால் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## ஆண்டு ஒன்று அனுமதிக்கு யூன் 30 விண்ணப்ப முடிவு!

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் ஆண்டு 1ல் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடம் இருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

விண்ணப்பப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதிபர்களிடம் நேரடியாகக் கையளிக்கப்பட வேண்டுமென்று கல்வி உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி யூன் மாதம் 30ந் திகதி என்றும் தெரிவக்கப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவங்கள் பத்திரிகையில் வெளிவரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## புலம்பெயர்ந்தவர் பிரச்சினை ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ் நிலையில் இடம்பெயர்ந்து பாடசாலைகள், மற்றும் பொது இடங்களில் தங்கியிருக்கும் பெண்கள், சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்தறியும் பணியில் மகளிர் அபிவிருத்தி நிலையத் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளை மானிப்பாய் பாடசாலையில் தங்கியிருக்கும் 5 வயதிற்குட்பட்ட 102 சிறார்களுக்கு மேற்படி அமைப்பு சத்துணவுகளை வழங்கியுள்ளதுடன் தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக அவ்வமைப்பின் பணிப்பாளர் திரும்தி சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். [ந]

★ இந்தோனேசியா

## சுமாத்திராதீவில் நில நடுக்கம் நூற்றுக்கணக்கானோர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள சுமாத்திராதீவில்இடம்பெற்ற சக்திவாய்ந்த நில நடுக்கம் ஒன்றில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் இறந்துள்ளார்கள். பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இந்த நில நடுக்கம் ஏற்பட்டது.இந்தநில அதிர்வு 7.9புள்ளியாக லிஸ்டர் அளவு கோலில் பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வினால் பல நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் இறந்த போதும் இறந்தவர்களின்எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என பொலிசார் தெரிவித்துள்ளனர்,

இந்த நில அதிர்வினால் பாரிய கட்டடங்களும், வீடுகளும் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-4)

## கொக்குவிலில் திட்டமிட்ட திருட்டு இடம்பெயர்ந்தோர் அவலம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையை அடுத்து நல்லூர் முத்திரைச் சந்தியிலிருந்து இடம்பெயர்ந்து கொக்குவில் கிழக்கு, புகையிரத வீதியில் வசித்து வந்தவர்களுடைய வீட்டில் நேற்று முன்தினம் இரவு 9 00 மணியளவில் திட்டமிட்டு திருட்டு இடம்பெற்றுள்ளது.

வீட்டில் தங்கியிருந்தவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில் அவர்களை சமையலறைக்குள் பூட்டிய பின்னர் இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

ஐம்பதினாயிரம் ரூபா பணம், பெறுமதிமிக்க புடவை வகைகள், வீடியோ கெஸட், காணி உறுதிகள், இலங்கை வங்கி கணக்கு புத்தகங்கள், தேசிய அடையாள அட்டைகள் விசேடசேவை அடையாள அட்டை என்பனவே திருட்டுப்போயுள்ளன.

வி லிங்கேஸ்வரன் என்பவருடைய வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது

## இலங்கைபெண் இருவர் கன்னியாகுமரியில் கைது

[சென்னை]

இலங்கையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கன்னியாகுமரியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை இரவு தமிழக பொலிஸாரால்கைது செய்யப்பட்டனர்.

இவ்விருவரும் சவுதி அரேபியாவில் தாதியாக வேலைபார்த்து வந்ததாகவும் கடவுச்சீட்டு இல்லாதகாரணத்தாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]


**அவசர கலந்துரையாடல்**

3ம் வருட முகாமைத்துவ கற்கைகள், வணிக பீட மாணவர்களுக்கான அவசரகலந்துரையாடல் 08-06-2000 நாளை (வியாழக்கிழமை) காலை 11-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (தென்மராட்சி, வடமராட்சி மாணவர்கள் உட்பட) அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

பிரதிநிதி
3ம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்

(கி-446)

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

**விசேட பொதுக் கூட்டம்**

மேற்படி சமாசத்தின் விசேட பொதுக் கூட்டம் 111, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள சமாச மண்டபத்தில் 12 - 06 - 2000 திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய இயக்குநர் சபைத் தெரிவு நடைபெற இருப்பதால் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றேன்.

குறிப்பு:
இவ் விசேட பொதுக்கூட்டம் சம்மந்தமான அறிவித்தல் சகல பிரதிநிதிகளுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சி. வி. கே. சிவஞானம்
தலைவர்
(யாழ். மா. வி. நு. கூ. ச. சமாசம்)
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம், [இ/449]

★ இன்றைய யுத்த சூழலில் கூட்டுறவுச்சங்கங்கள்

# உணவு விநியோகத்தை சீரான முறையில் மேற்கொள்ளவேண்டும்

(யாழ்ப்பாணம்)

இன்றைய யுத்தசூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்தில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பொறுப்புடனும், அவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்று யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர்களையும் பொது முகாமையாளர்களையும் கேட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி. மா. சீனி போன்றவற்றினை மக்களுக்கு சீரான முறையில் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் மேற்கொள்கிறார்களா? என்பதை சங்கநிர்வாகம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சீரான உணவு விநியோகத்தையும், நிவாரணப் பொருள் விநியோகத்தையும் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு கூட்டுறவுத்திணைக்களத்தினர் கணக்காய்வு வேலைகளை தற்காலிகமாக நிறுத்தி கூட்டுறவுப்பரிசோதகர்கள், பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் பிரதேசசெயலர் பிரிவுகளில் இயங்கும் சகல கூட்டுறவுச்சங்கங்களையும் மேற்பார்வைசெய்து திடீர் பரிசோதனைகளையும் மேற்கொள்ளவுள்ளார்கள்

இது தொடர்பான சகல அறிவுறுத்தல்களும் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் வழங்கப் பட்டுள்ளது, (வ)

## கதிரித்தம்பி தர்மலிங்கம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரித்தம்பி தர்மலிங்கம் 06 - 06 - 2000 அன்று காலமானார்.

இவர் முன்னாள் பதுளை வர்த்தகரும் கிளிநொச்சி ''யோகாம்பிகா ஸ்ரோர்ஸ்'' உரிமையாளரும்ஆவார்.

அன்னார் கதிரித்தம்பி யோகாம்பிகையின் மகனும், காவேரியம்மாவின் கணவரும் காலஞ்சென்ற ஏரம்பு [ஆசிரியர்,] காலஞ்சென்ற நல்லதம்பி [ஆசிரியர்), முத்துசகுமாரு (ஆசிரியர்), அமபலவாணர் (கனடா), பராசக்தி ஆகியோரின் சகோதரனும், நவரெட்ணசிங்கம் [போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்), மங்கலேஸ்வரி, மோகனதாஸ் (சுவிஸ்லாந்து), சாந்தினி [கனடா] ஆகியோரின் தந்தையும், செல்வத்துரை (வருமானவரி இலாகா கொழும்பு), பேரின்பநாதன் (கனடா), குமுதினி, பிரேமகலா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் மாமனாரும், துசியந்தி, மயூரன், செந்தூரன், கௌதமன், பிரியதர்சன், வித்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிச் சடங்கு இன்று [07 - 06 - 2000] புதன் கிழமை புங்குடுதீவில் நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நவரெட்ணசிங்கம்
(ஆனந்தன்)
(மகன்)
[போக்குவரத்துச்சபை உத்தியோகத்தர்)

அரசடி வீதி,
அரசடிச் சந்தி,
நல்லூர்.
[775]

## இராஜரெட்ணம் இராஜேஸ்வரி

[மானிப்பாய்]

மானிப்பாய் தெற்கு அதிகார் செல்லமுத்து வீதியில் வசிக்கும் இராஜரெட்ணம் இராஜேஸ்வரி நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராஜரெட்ணத்தின் அன்பு மனைவியும், இந்திரா, ரவிக்குமார், சுரேஷ்குமார், ஆகியோரின் அன்புத்தாயாரும், அருந்ததி, உஷாயினி, ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன், சஜர்னி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாலசுப்பிரமணியம், குலரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவிமனோகரி, புஷ்பராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிப்லி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

இந்திரா
(மகள்)

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

## துரையப்பா திருநாவுக்கரசு பத்தர்

(சாமியார்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச்சேர்ந்த துரையப்பா திருநாவுக்கரசு பத்தர் அவர்கள் நேற்று (06-06-2000) செவ்வாய்க்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் திருமதி சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் ஜெயராமன், ஜெயராணி, ஜெயபாமா, ஜெயகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புலேந்திரன், நகுலேஸ்வரன் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று [7-6-2000] புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது சிவப்பிரகாசம் வீதி, இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

தி. ஜெயகரன்
(மகன்)

157, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

[759]

### இலங்கையில் --

துள்ளார்.

இந்திய தூதர் சிவ் சங்கர் மேனனுக்கு ஊடாக யாழ். ஆயர் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

யுத்தநிலையால் அவதியுறும் யாழ்ப்பாண மக்களின் துன்ப துயரங்கள் நீங்கி அமைதி நிலை ஏற்பட இந்தியப் பிரதமர் உதவ வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

### மூழ்கடிக்கப்பட்ட.....

இப் படகுகளில் இருந்த 23 பேரைக் காணவில்லை எனவும் 11 கடற்படையினர் மீட்கப்பட்டனர் என்றும் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தோம். (வ)

### தடைமுகாம்கள் ...

தடைகளையும் நெரிசல்களையும் தவிர்க்குமுகமாக இத்தடைகள் அகற்றப்படுவதாக கொழும்புப் பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு வழமையாக நடைபெறும் சுற்றிவளைப்புக்கள் தேடுதல் வேட்டை என்பன தீவிரப் படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (வ)

### தீர்வுகாண ...

கருத்தும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பட்டாளி மக்கள் கட்சி ஆகியவற்றின் நிலைப்பாடும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒற்றுமை குறித்து தவறான கருத்துக்களை வெளிப் படுத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்பு கமிட்டியில் மட்டுமே உறுப்புக் கட்சியினர் கருத்துத்தெரிவிக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மு கருணாநிதி போன்ற பக்குவப்பட்ட பொறுப்பான ஒரு தலைவர் ஈழத்தை ஆதரிப்பதாக பிரதமரிடம் நேரடியாகக் கூறியிருக்கலாம் என்று கூறிய ஜனாகிருஷ்ணமூர்த்தி இலங்கையின் இன்றைய நிலையில் செக்கோசிலவாக்கியா முறை பொருந்தாது என்றும் கூறினார். (வ)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது [க-வ]

## இடம்பெயர்ந்தோர் நலன் பேணுவதில் யாழ். மாநகரசபையினர் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்டுள்ள இடம்பெயர்வு காரணமாக யாழ் மாநகரசபைப் பகுதிக்குள் மட்டுமேழு இடம்பெயர்ந்தோர் முகாமகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குத்தேவையான அடிப்படை சுகாதார வசதிகளை வழங்குவதில் யாழ் மாநகர சபைப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இம்முகாம்களில் தங்கியுள்ளவர்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வதிலும் சுகாதாரப் பகுதியினர் முனைப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக யாழ். வைத்திய சங்க அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட உடுபுடவைகள் நேற்று நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயத்திலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டது.

இத்தகைய சேவைகளை ஏனைய முகாம்களிலுள்ள மக்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப பட்டுவருவதாகவும் இதில் பங்குகொள்ள விரும்பும் தனிப்பட்டவர்கள் நிறுவனங்களை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இயங்கும் அவசர கால சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர், தெய்வேந்திரன் கேட்டுள்ளார். [ந]

### தென்மராட்சி---

தென்மராட்சிப் பகுதியில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தென்மராட்சி மேற்கு பலநோக்குச் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரு சங்கங்களும் சுமார் ஒரு கோடியே ஐம்பது லட்ச ரூபாவினை இழநதுள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

இந்த இழப்பு உணவுப் பொருட்கள், தளபாடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### அவசரகாலச்---

வக்கு சரத்பொம்கே ராஜமனோகரி புலேந்திரன், மற்றும் வாசுதேவ நாணயக்கார உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

சுமார் ஐநூறு பேருக்கு மேலாக கலந்து கொண்ட இவ்வார்ப்பாட்டத்தில் அரசாங்கத்திற்கெதிராக அவசர காலச் சட்டத்தை நீக்கு செய்தித் தணிக்கை வேண்டாம் எமக்கு ஜனநாயக ஆட்சியே வேண்டும் என்ற கோஷங்கள் எழுப்பபட்டன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட போது சிலமணிநேரம் போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் அமுல் செய் ''அவசர கால சட்டத்தை நீக்கு'' என்பன போன்ற வார்த்தைகள் அடங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர் ஏந்திய வண்ணம் இருந்தனர்.

ஆர்ப்பாட்ட முடிவில் சுதந்திர இயக்கத்தின் தலைவர் சனத் அனந்த தேசப்பிரிய அரசு உடனடியாக பத்திரிகைத் தணிக்கையை நீக்க வேண்டுமெனக் கோரினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஒட்டி புகையிரத நிலையத்திற்கு முன்பாக பெருமளவு பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (வ-7)

### புலிகளிடம் ---

முயற்சி செய்து வருவதாகவும் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் விடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பதினோராவது பாராளுமன்றத் தேர்தலை ஒரு போதும் ஒத்தி வைக்கப் போவதில்லை எனவும் ஆகஸ்ட் மாதத்திற்கும், நவம்பர் மாதத்திற்கும் இடையே தேர்தல்களை நடாத்த எதிர் பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புலிகளிடம் தோற்றுப்போன இடங்கள் இராணுவம் எப்போது மீளக் கைப்பற்றும் என்று கூறுவது கஷ்டமாக இருந்தாலும் இராணுவம் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுகிறது என்றார். (வ)

### பரீட்சை ---

புலமைப் பரிசில் பரீட்சைகள் யூலை 6ம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் எம். ஆர்.சி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைகளுக்கான ஏற்பாடுகள் பெருமளவில் பூர்த்தி அடைந்துள்ளதுடன் குறித்த திகதிகளில் திட்டமிட்டபடி பரீட்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)

## பிற்போடப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன வளர்ச்சி நிதிக்காக 13-5-2000 அன்று இடம் பெறஇருந்த அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 29-7-2000 அன்று அதிஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத்தருகிறேன்,

தி. ஞா. செந்தமிழ்செல்வன்
தலைவர்
இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளனம்.
ஊர்காவற்றுறை. (கி 451)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 -ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.